2.8.2019.

அசல் வழக்கு எண் 125-2013

பிவா.சா.1 சீதா சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிதரப்பில் குறுக்கு விசாரணை

2ம் பிரதிவாதி ராமசந்திர மூர்த்தி என் மகன் 3ம் பிரதிவாதி என் மகள். வாதி எனக்கு என் கணவருடன் பிறந்த சகோதரியின் மகன். என் கணவருடன் பிறந்தவர்கள் 3 பேர்கள் என் கணவர் பெயர் முத்துகவுண்டர் என்ற ஜெயகண்ணு 2வது செல்லம்மாள் 3வது குபேந்திரன். தாவா சர்வே நம்பர் 42-1ல் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 32 செண்டு என்றால் சரிதான். தாவா சொத்து என் மாமியார் சின்னதாயிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சின்னதாயி கணவர் பெயர் ராமசந்திர கவுண்டர். சின்னதாயி மற்றும் ராமசந்திர கவுண்டருக்கு மேற்கண்ட 3 நபர்கள் என்றால் சரிதான். என் கணவர் சிறு வயதாக இருக்கும் போதே ராமசந்திரகவுண்டர் இறந்துவிட்டார். சின்னதாயி இறந்து 30 வருடங்கள் இருக்கும். சின்னதாயி இறப்பு சான்றிதழ் இல்லை.என் கணவர் இறந்து சுமார் 15 வருடங்கள் இருக்கும். எனது நிருபணவாக்கு மூலத்தில் சின்னதாயி இறப்பிற்கு பிறகு அவரது மகன் ஜெயகண்ணன் என்ற முத்து கூடகவுண்டர் ச.எண்.42-1 மற்றும் குடும்ப சொத்துக்களை வாய்கராலாக பிரித்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் குறிப்பிடவில்லை. எனக்கு திருமணம் நடந்த வருடம் தெரியாது. சுமார் 45,46வருடம் இருக்கும் என் கணவர் விவசாய வேலை செய்து வந்தார். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விபரங்களை நான் எனது வழக்கறிஞர் மூலமாக படித்து தெரிந்து கொண்டேன். நானும் ராமசந்திரமூர்த்தியோ தவறான பத்திரங்களில் கையெழுத்து செய்வதில்லை. மேலகோட்டை கிராமத்தில் முத்துகூடகவுண்டர் மகன் ராமசந்திர மூர்த்தி என் மகனை குறிக்கும் என்றால் சரிதான். ராமசந்திர கவுண்டர் மகன் குபேந்திரன் என்பது என் கணவருடன் பிறந்த சகோதரரை குறிக்கும் என்றால் சரிதான். ராமசந்திர கவுண்டர் மகளின் பெயர் செல்லம்மாள் என்றால் சரிதான் அவர் கணவர் பெயர் தெரியாது. மேலகோட்டையில் செல்லம்மாள் கிழக்குபுறமும் நான் மேற்குபுறமும் குடியிருந்து வருகிறோம்.எனது நிருபணவாக்குமூலத்தில் குபேந்திரனுக்கு வாரிசு இல்லாததால் ஒரு சில சொத்துக்களை தனது சகோதரி செல்லம்மாளுக்கு கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான்

ச.எண் 42-1ல் கண்ட 4ஏக்கர் 32 செண்டை 3 பேர்கள் பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டது என்றால் சரிதான்.குபேந்திரன் செல்லம்மாளுக்கு சொத்துக்களை கொடுத்தாரா என்று தெரியாது. குபேந்திரன் செல்லம்மாளுக்கு சொத்து கொடுத்தது சம்பந்தமான ஆவணம் இல்லை. ச.எண்.42-1ல் கண்ட சொத்துக்கு எங்கள் பெயரிலும் வாதிகளின் தரப்பின் பெயரிலும் குபேந்திரன் பெயரிலும் கூட்டாக பட்டா உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சின்னதாயி உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்துக்களை பொறுத்து எந்த ஆவணமும் அவரது மக்களுக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் குடும்ப சொத்துக்களை சின்னதாயி இறப்பிற்கு பிறகு பிரித்துக்கொண்டதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.